சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **79 / 2022**

பெயர்: ராமசாமி ம.சா. 1 தேதி **13.06.2025**

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சாலை விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் மணிகண்டன். எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் யாருடையது என்றால் எனது பெயரில் தான் உள்ளது. மேற்படி இருசக்கர வாகனம் என்னுடையது என்பதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமை இல்லை என்றால் எது பற்றி எனக்கு தெரியாது. காப்பீடு இல்லாத ஒரு இருசக்கர வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாமல் எனது மகன் ஓட்டிச்சென்றது மோட்டார் வாகன விதிமுறைகளை மீறியுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து எங்கு நடைபெற்றது என்றால் பாளையத்திற்கு மேற்கு சத்திரப்பட்டி என்கின்ற இடத்தில் நடைபெற்றது. மேற்படி விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் என்னுடைய மைத்துனர் கார்த்திக் என்பவர் தான் புகார் கொடுத்தார். முதல் எதிர்மனுதாரர் லாரியை அதனுடைய ஓட்டுநரான மூன்றாவது எதிர்மனுதாரர் சாதாரண வேகத்தில் தான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஓட்டு வந்தார் என்றும் எனது மகன் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வாகனத்தி ஓட்டிச்சென்று முதல் எதிர்மனுதாரர் லாரி மீது மோதிவிபத்து ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

2. மேற்படி சாலை விபத்திற்கு எனது மகனின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் சம்பவ இடத்திலே யே இறந்துபோய்விட்டார். எனது மகனுக்கு இறக்கும் போது வயது 24 இருக்கும். மேற்படி சாலை விபத்தின்போது எனது மகனுக்கு 24 வயது என்று கூறுவது இழப்பீடு அதிகமாக கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் சென்னையில் வேலையில் இருப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-8 ஆவணத்தினை பார்த்தாலே சாலை விபத்து எனது மகன் கவனக்குறைவால் தான் நடைபெற்றது என தெரியும் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் லாரியின் முன் வலது சக்கரத்தில் தான் எனது மகனின் வாகனம் மோதியுள்ளது என்பது ம.சா.ஆ-9 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தின் படி எனது மகன் ரூ.22,500/- சம்பாத்தித்து வந்தார் என்பது பொய் என்றால் சரியல்ல.

3.இவ்வழக்கின் இரண்டாவது மனுதாரர் என்னுடைய மகன் தான். அவர் சென்னையில் வேலை செய்து வருகிறார். இரண்டாவது மனுதாரர் இறந்து போன எனது மகனை சார்ந்து வாழ்ந்து வருவதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ-10 ஆவணம் ஏற்றுக்கொள்ள கூடியவை அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மகனின் கவனக்குறைவால் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளதால் இரண்டாவது எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடானது அதிகமானது என்றால் சரியல்ல. இறந்து போன நபர் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.